

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் நடைபெற்ற திமுக பவள விழா பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு 1000க்கும் மேற்பட்டோருக்கு நலஉதவிகள் வழங்கி, சிறப்புரையாற்றினார். உடன் சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்பி., இரா.ஸ்ரீதரன், மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன், பொன்.முத்து, ப.கார்த்திவேல்மாறன், சு.ராஜாங்கம், எஸ்.கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ்.சதீஷ்குமார், டி.தீலீப்குமார், எழில்மாறன் உட்பட பலர் உள்ளனர்.



கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் (14.11.2024) காட்டுமன்னார்கோயில் திமுக அலுவலகத்தில் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் இள.புகழேந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். உடன் கோ.ஐயப்பன் எம்.எல்.ஏ., கழக பொறியாளர் அணி செயலாளர் துரை.கி.சரவணன், மாவட்ட துணை செயலாளர்கள் ஆ.ஞானமுத்து, ஆர்.சக்திவேல், சுதாசம்பத், ஒன்றிய செயலாளர்கள் அ.முத்துசாமி, தங்க.ஆனந்தன், அ.நாராயணசாமி, த.சங்கர், வி.கோவிந்தசாமி, முத்து.பெருமாள் ஆர்.கலையரசன், பி.சுந்தரபாண்டியன், கே.ஆர்.ராயர், தெ.காசிராஜன், பி.சுப்பிரமணியன், கே.ஆர்.தனஞ்செயன், ஆர்.விஜயசுந்தரம், எம்.மனோகரன், டி.திருமூர்த்தி, எஸ்.செந்தில்குமார், கே.ஆர்.கோவிந்தராஜ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!



அடுத்த ஆண்டு 2025 ஜனவரி 1ம் தேதியை தகுதி நாளாகக்கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. அதன்படி ஆகஸ்ட் 20ஆம் தேதி முதல் அக்டோபர் 31ஆம் தேதி வரை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல், வாக்குச்சாவடி மறுசீரமைப்பு, வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையில் உள்ள முரண் பாடுகளை நீக்குதல், வாக்காளர் பட்டியலில் நல்ல தரமான புகைப்படங்களை இணைத்தல், பகுதி எல்லைகளை ஓரளவு மறுசீரமைத்து வாக்குச்சாவடி பட்டியல் குறித்து ஒப்புதல் பெறுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து ஒருங்கிணைந்த வரைவு வாக்காளர் பட்டியல் அக்டோபர் 29 ஆம் தேதி வெளியிடப்பட்டு நவம்பர் , 28ஆம் தேதி வரை பெயர் சேர்த்தல் நீக்கம் செய்தல் உள்ளிட்டவற்றிற்கான விண்ணப்பங்கள் பெறப்பட உள்ளது. 2025 ஆம் ஆண்டு ஜனவரி 6ஆம் தேதி இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட உள்ளது.

எனவே அக்டோபர் 29ஆம் தேதி முதல் நவம்பர் 28ஆம் தேதி வரை, வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படவோ அல்லது வாக்காளர் பட்டியல் ஏற்கனவே இடம்பெற்றுள்ள பதிவுகளில் நீக்கம், திருத்தங்கள், இடமாற்றம் செய்யவோ அல்லது ஆதார் எண்ணை இணைக்க விரும்பும் வாக்காளர்கள் தகுதியுள்ள குடிமக்கள் படிவங்கள் 6,மற்றும் 6பி,7 அல்லது 8 ஆகியவற்றை பூர்த்தி செய்து வழங்கலாம். அலுவலக வேலை நாட்களில் வாக்குச் சாவடி நிலை அலுவலர் வாக்குப்பதிவு அதிகாரி, உதவி வாக்குப்பதிவு அதிகாரி அலுவலகங்களில் சேர்க்கலாம்.

பெயர் சேர்த்தலுக்கான விண்ணப்பத்துடன் இருப்பிட முகவரி மற்றும் வயது ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்க வயதிற்கான சான்றாக பிறப்புச் சான்றிதழ், ஆதார், பான் அடையாள அட்டை, ஓட்டுனர் உரிமம், பிறந்த தேதியுடன் கூடிய 10 அல்லது12 ஆம் வகுப்பு சான்றிதழ், கடவுச்சீட்டு ஆகியவற்றை அளிக்கலாம். 25 வயதுக்கு கீழ் உள்ள விண்ணப்பதாரர்கள் வயது சான்றிதழை அளிக்க வேண்டியது கட்டாயமாகும். இதற்காக இணைய தள முகவரி மற்றும் வாக்காளர் உதவி கைபேசி செயலி (voter helpline mobile app) ஆகியவற்றின் மூலம் ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது.

கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க , கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி [ 16.11.2024, 17.11.2024], சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, மற்றும் [ 23.11.2024, 24.11.2024] , சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் நடக்க உள்ள வாக்காளர் பட்டியல் திருத்தம் முகாம்களில் கடலூர் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட, ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, கிளை, வார்டு கழக செயலாளர்கள், பாகமுகவர்கள் [ BLA2] மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் அனைவரும் அவரவர் பகுதியில் உள்ள வாக்குச்சாவடிகளில் 01.01.2025 அன்று 18 வயது நிறைவடைபவர்களை புதிய வாக்காளர்களாக பதிவு செய்தல், அந்தந்த பூத்களில் தகுதியற்ற வாக்காளர்களை நீக்குதல், தகுதியான வாக்காளர்களை சேர்த்தல் போன்ற வாக்காளர் திருத்தப் பட்டியல் பணியிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் சி.வெ.கணேசன்**
செயலாளர்
கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி அறிவிப்பு !



சேலம், நவ. 16 -

சேலம் மேற்கு மாவட்டச செயலாளர் டி.எம். செல்வகணபதி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சேலம் மேற்கு மாவட்டதி.மு.க செயற்குழுக் கூட் டம் வருகின்ற 20.11.2024 -புதன்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நங்கவள்ளி, கருமலைக் கூடலில் உள்ளது. ஜே.கே.பி. மஹாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் பி.தங்க முத்து தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள் -முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாயஅணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மை நலக் குழு உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்பஅணி, சுற்று சூழல்அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதிதிராவிடர் நலக்குழு ஆகியவற்றின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு கூட்டத்தை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 1) நவம்பர் 27ம் தேதி கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து

2) நவம்பர் 23 மற்றும் 24ஆம் தேதிகளில் வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தம் செய்ய சிறப்பு முகாம் பணிகள் குறித்து.

3) கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



தருமபுரி மேற்கு மாவட்டம், காரிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் எம்வீடி.கோபால் தலைமையில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஜக்க சமுத்திரம், ஜிட்டாண்டஅள்ளி, மகேந்திரமங்கலம், பிக்கனஅள்ளி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு நேரில் சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார். உடன் மாநில விவசாய அணி துணைச்செயலாளர் சூடப்பட்டி சுப்பிரமணி,ஒன்றிய செயலாளர்கள் முனியப்பன், அன்பழகன் மற்றும் கழகத்தினர் பங்கேற்றனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில்

# வாக்காளர் பட்டியல் திருத்தும் பணியில் தி.மு.க. நிர்வாகிகள் முழுமையாக ஈடுபடுவீர் !

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் அறிக்கை!



திண்டிவனம், நவ. 16 -

வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்தலுக்கான சிறப்பு முகாமை தி.மு.கவினர் மேற்கொள்ள வேண்டும் என விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கையில் தெரிவிக்கையில்கழகத் தலைவர் -முதலமைச்சர் மு. க .ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி வருகின்ற 2025 ஜனவரி 1ஆம் தேதி அன்று 18 வயது நிறைந்தவர்கள் தங்களது பெயர்களையும், புதிதாக குடிபெயர்ந்து உள்ளவர்களின் பெயர்களையும் தற்போதுள்ள வாக்காளர் பட்டியலில் சேர்க்கவும் தொகுதியில் இருந்து இடம் மாறியவர்கள் மற்றும் இறந்தவர்களின் பெயர்களை நீக்கவும் வாக்காளர் பெயர் பட்டியலில் பெயர் சேர்த்தல் நீக்குதல் திருத்தம் செய்தலுகான சிறப்பு முகாம் இன்று 16.11.24,நாளை 17.11.24 ஆகியதேதிகளில் நடைபெறுகிறது.

இதைத் தொடர்ந்து இரண்டாம் கட்ட சிறப்பு முகாம் எதிர் வரும் 23.11.2024, 24.11.2024

ஆகிய தேதிகளில் காலை 9:30 மணி முதல் மாலை 5.30மணி வரைநடைபெறும் என தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார். அதன்படி விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி,மயிலம், திண்டிவனம், ஆகிய தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல், திருத்தல், மற்றும் நீக்குதல், தொடர்பான சிறப்பு முகாம் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் நடைபெற உள்ளது.

எனவே மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் இப்பணிகளில் பங்கேற்று உதவிட வேண்டும் என இவ்வாறு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்சருமான சி.வெ.கணேசன் முன்னிலையில் பா.ம.க,வினர் கழகத்தில் இணைந்தனர். கம்மாபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கோட்டேரி பழனி சுரேஷ் தலைமை தாங்கினார் . இதில் பா.ம.க ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் தனுஷ் குமார், புதுப்பேட்டை வேல்முருகன் தலைமையில் 65க்கும் மேற்பட்டோர் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். இந்நிகழ்வில் மாவட்ட கழக பொருளாளர் ஜி.தண்டபாணி, மாவட்டக் கழக துணை செயலாளர் ஆர்.எஸ்.எம்.தணிகை செல்வன், ஆனந்தி சரவணன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.வி.எஸ்.வெங்கடேசன், இளைஞரணிதுணை அமைப்பாளர் கோட்டேரி ஜி.பரமசிவம், மாவட்டக் கழக பிரதிநிதி என்.சிவா, ஒன்றிய பிரதிநிதி உதயகுமார், புதுப்பேட்டை கிளை செயலாளர் வேணுகோபால் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பா.ம.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நிதி நிறுவன மோசடி வழக்கு:

## தேவநாதன் யாதவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

சென்னை, நவ. 16 -

சென்னை மயிலாப்பூரில் செயல்பட்டு வந்த தி மயிலாப்பூர் இந்து பெர்மனெட் ஃபண்ட் நிதி நிறுவனத்தில் முதலீடு செய்தவர்களிடம் 525 கோடி ரூபாய் பெற்று மோசடி செய்ததாக அந்நிதி நிறுவனத்தின் இயக்குநர் தேவநாதன் யாதவ், குணசீலன், மகிமை நாதன், தேவ சேனாதிபதி, சுதிர் சங்கர் ஆகிய 6 பேரை சென்னை பொருளாதார குற்றப்பிரிவு காவல் துறையினர் கடந்த ஆகஸ்ட் மாதம் கைது செய்தனர்.

சாலமன் மோகன்தாஸ் என்பவரை தேடி வருகின்றனர். நிதி நிறுவன மோசடி வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், தேவநாதன் யாதவ் உள்ளிட்டோருக்கு எதிராக சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் காவல்துறையினர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளனர். புலன் விசாரணை முழுமையாக நிறை வடைந்த பிறகு கூடுதல் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவுள்ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் துரை. கிருஷ்ணமூர்த்தி
### நவம்பர் 16 (1999)



**மருத்துவரான இவர், திராவிடக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.**

**1989ஆம் ஆண்டு சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில், கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, தொகுதி வாழ் மக்களுக்காக பணிபுரிந்து அனைவரின் பாராட்டைப் பெற்றவர்.**

**தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**